டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.11.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 118 | Madurai | Online Edition

தூய்மைக்கான சிறப்பு இயக்கம் 6.0-ஐ வெற்றிகரமாக நிறைவு செய்தது மீன்வளத் துறை

புது தில்லி, நவ.6

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வள அமைச்சகத்தின் மீன்வளத் துறை, நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறையின் வழிகாட்டுதலின் கீழ், 2026 அக்டோபர் 2 முதல் 31 வரை நடத்தப்பட்ட தூய்மைக்கான சிறப்பு இயக்கம் 6.0-ல் தனது பங்களிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

சுமார் ஒரு மாத காலத்தில் இந்தத் துறை, 40 தூய்மைப் பிரச்சாரங்களை நடத்தும் தனது இலக்கை அடைந்தது. குறைகளைத் தீர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. இந்தப் பிரச்சாரத்தின் போது, பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 100 குறைகளும், அவை தொடர்பான 30 மேல்முறையீடுகளும் முழுமையாகத் தீர்த்து வைக்கப்பட்டன. மொத்தம் 800 இயல் ஆவணக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 745 கோப்புகள் அகற்றப்பட்டன. இதேபோல ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 45 மின்னணுக் கோப்புகளில், 25 கோப்புகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. தேவையற்ற பொருட்களை அகற்றியதன் மூலம், சுமார் 1,150 சதுர அடி அலுவலக இடம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.



உழவர் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி!

பெரம்பலூர், நவ.6

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், வேளாண்மைத் துறையின் அட்மா (ATMA) திட்டத்துடன் இணைந்து இரண்டு நாள் உழவர் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் நடத்தியது. இந்நிகழ்ச்சியை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ.) முனைவர் மு.புனிதாவதி தொடங்கி வைத்தார். வேளாண்மை இணை இயக்குநர் (பொ.) ராமசாமி தலைமை வகித்துச் சிறப்புரை ஆற்றினார். அட்மா திட்டத்தின் துணை இயக்குநர் இந்திராணி முன்னிலை வகித்தார்.



வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ.) மற்றும் உழவியல் துறை சார்ந்த முனைவர் மு.புனிதாவதி மக்காச்சோளம் மற்றும் நெல் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்தும், பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்ப வல்லுநர் தோம்னிக் மனோஜ் முக்கியப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்தும், மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் கோகிலவாணி, தோட்டக்கலை மற்றும் வேளாண் விளைபொருட்களின் மதிப்புக்கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்தும், ஆய்வகத் தொழில்நுட்பவியலர் சதீக்ஷ்குமார் மண் வள மேலாண்மை, உரங்களைச் சமச்சீராகப் பயன்படுத்துதல், உயிர் உரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

குறித்தும், கணினித் திட்ட உதவியாளர் வித்யா, வெங்காயப் பயிர் ஆலோசனை மொபைல் செயலி (Onion Crop Advisory App) குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

விவசாயிகள் தங்கள் சாகுபடியில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடி, அவற்றுக்கான உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளையும் தீர்வுகளையும் பெற்றனர். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளின் வயல்களுக்கு நேரடியாகச் சென்று பயிர்களின் வளர்ச்சி நிலை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் ஆகியவை குறித்து கள ஆய்வு மேற்கொண்டு, தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, விவசாயிகள் தங்களது வயல்வெளிப் பிரச்சினைகளுக்கு விஞ்ஞானிகளிட மிருந்து நேரடித் தீர்வுகளைப் பெறுவதற்கும், நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.

மேலும், மத்திய அரசின் 'கேத் பச்சாவோ அபியான்' (Khet Bachao Abhiyan) திட்டம் குறித்த விழிப்புணர்வும் விவசாயி களிடையே ஏற்படுத்தப்பட்டது. மின் லைஃப் (Mission LiFE – Lifestyle for Environment) திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான உணவு முறைகளைப் பின்பற்றுதல், சிறு தானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவுப் பயிர்களின் முக்கியத்துவம், உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் உணவுப் பொருட்களை வீணாக்காமல் பயன்படுத்துதல் ஆகியவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைப் பொறியியல் துறையைச் சேர்ந்த வேளாண் அலுவலர்கள் மற்றும் வனச்சரக அலுவல கத்தைச் சேர்ந்த வனச்சரகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, தங்கள் துறைகளின் முக்கியத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத் தனர். இறுதியாக, வேளாண்மை அலுவலர் (ATMA) தனபால் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

அட்மா திட்டத்தின் மூலம் அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி



நாமக்கல், நவ.6 நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 67 கவுண்டம்பாளையம் கிராமத்தில் அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா தலைமை வகித்து வேளாண்மைத் துறை சார்ந்த மத்திய மாநில திட்டங்கள், நுண்ணூட்டங்களின் பயன்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்கு தனி குறியீடு வழங்கும் முகாம் நடைபெறுதல் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். இப்பயிற்சியில் வைத்தியலிங்கம், துணை தோட்டக்கலை அலுவலர் கலந்து கொண்டு அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் அவற்றை கொண்டு பயிர்களுக்கு தெளிப்பதன் மூலம் பூச்சி, நோய் கட்டுபாடு மற்றும் வளர்ச்சி ஊக்கியாக பயன்படுவது குறித்து விரிவாக விவசாயிகளுக்கு கூறி விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில் வெற்றிவேல் உதவி வேளாண்மை அலுவலர் இடுப்பொருட்கள் இருப்பு விவரம் மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடுகள் பற்றி விவசாயிகளுக்கு கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர் அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றியும் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் கிராமபுற அனுபவ பயிற்சிக்காக எலச்சிபாளையம் வட்டாரத்திற்கு வருகைப் புரிந்திருக்கும் PGP – வேளாண்மை கல்லூரி மாணவர்கள் 7 பேர் கலந்து கொண்டுவிவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு பற்றிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

காளான் சாகுபடி முதல் மதிப்புக்கூட்டல் வரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

இராமநாதபுரம், நவ.6

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன், பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் வண்ணாங்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளியின் தொழிற்கல்வி மாணவர்களுக்கு, இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK) காளான் வளர்ப்பாளர் திறன் மேம்பாட்டிற்கான 17 நாட்கள் பயிற்சியானது 12.10.26 முதல் 06.11.26 வரை நடைபெற்றது. இப்பயிற்சியில் மொத்தம் 17 மாணவர்கள் பங்கேற்றுப் பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியானது வேளாண்மை அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.இராமகிருஷ்ணன் வழிகாட்டு தலின்படி நடைபெற்றது. இப்பயிற்சியில் முனைவர்கள் தி.பாலாஜி, சி.விஜயராகவன், மு.ஜெகதீசன், இ.கண்ணையன், ஆ.விஜயகுமார் மற்றும் வெ.வித்யா, கு.நாகமகிரிலட்சுமி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகளை வழங்கினர்.

பயிற்சியில் காளான் வகைகள் மற்றும் அவற்றின் முக்கியத் துவம், காளான் வளர்ப்பிற்குத் தேவையான மூலப் பொருட் களைத் தேர்வு செய்தல், காளான் விதை (Spawn) தயாரித்தல், வளர்ப்பு ஊடகம் (Substrate) தயாரித்தல், காளான் படுக்கை தயாரிக்கும் முறைகள், சிப்பிக் காளான் மற்றும் பால் காளான் சாகுபடித் தொழில்நுட்பங்கள், காளான் வளர்ப்பிற்கான அறை அமைத்தல் மற்றும் பராமரித்தல், அறுவடை முறைகள், காளான்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் முறைகள், காளான் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் காளான் வளர்ப்பைத் தொழில்முனைவாக மேற்கொள்ளும் வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், காளான் வளர்ப்பின் பல்வேறு நிலைகள் குறித்து மாணவர்களுக்கு செயல்விளக்கங்களுடன் பயிற்சி அளிக்கப் பட்டது. இதன் மூலம் மாணவர்கள் காளான் வளர்ப்புத் தொழில்

நுட்பங்களை நேரடியாகக் கற்றுக்கொண்டு, சுயதொழில் தொடங்குவதற்கான திறன்களையும் நடைமுறை அறிவையும் பெற்றனர். இப்பயிற்சியில் யூ.கணேசன், வேளாண் தொழிற் கல்வி ஆசிரியர், கலந்து கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டு தல்களை வழங்கினார்.

இப்பயிற்சியின் மூலம் பள்ளிக் கல்வித்துறையின் தொழிற் கல்வி மாணவர்களிடையே காளான் வளர்ப்புத் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வேலைவாய்ப்பை உருவாக்கும் திறன், சுயதொழில் முனைவோர் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவது முக்கிய நோக்கமாக அமைந்தது.

நெல் சாகுபடியில் வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை



சேலம், நவ.6

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் அனுப்பூர் கிராமத்தில் விளைநிலம் காப்போம் இயக்கம் நடைபெற்றது.

இப்பயிற்சியில் உதவி வேளாண்மை இயக்குநர் கலந்து கொண்டு பேசுகையில், விளைநிலம் காப்போம் இயக்கம் மற்றும் மண்வளம் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றியும், மண் பரிசோதளை அறிக்கையின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான பேருட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் அளிக்க வேண்டும். இதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாட்டையும் குறைக்கலாம். மண்ணின் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாது காக்கலாம். மேலும் உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், இயற்கை இடுபொருட்கள் மற்றும் இயற்கை பூச்சி விரட்டிகளை பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும், நெல் சாகுபடியில் வரப்பு பயிராக உளுந்து சாகுபடி, பறவை இருப்பு குச்சி அமைத்தல் குறித்தும், உயிர் உரங்களால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் தனித்துவமான அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்து இருமடங்கு மகசூல் மற்றும் மும்மடங்கு வருமானம் பெற ஆலோசனை வழங்கினார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

குரோமோர் கிராம் மாதிரி கிராமத்தில் விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம்



ஈரோடு, நவ.6

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கூகலூர் கிராமத்தில் 5.11.26 அன்று கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் குரோமோர் கிராம் மாதிரி கிராம விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட், ஈரோடு பகுதி மேலாளர் வேளாண் அலுவலர் N.சோனைமுத்து வரவேற்புரை வழங்கினார். கூகலூர் கிராமத்தில் குரோமோர் கிராம் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயிகளுக்கான பயிர் ஆலோசனைச் சேவைகள், மண் பரிசோதனை, ட்ரோன் மூலம் பயிர் பாதுகாப்பு சேவைகள் மற்றும் கடந்த ஆண்டு மேற் கொள்ளப்பட்ட சமூகப் பொறுப்புணர்வுத் திட்டப் (CSR) பணிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், நடப்பு ஆண்டில் செயல் படுத்த திட்டமிடப்பட்டுள்ள CSR பணிகள் குறித்தும் விளக்கினார்.

கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட், தமிழ்நாடு மாநில மூத்த வேளாண் அலுவலர் P.குருசாமி சிறப்புரையாற்றினார். நிறுவனத்தின் தயாரிப்புகளான குரோமோர் உரங்கள், SND, இயற்கை உரங்கள் மற்றும் நானோ DAP ஆகியவற்றின் சிறப்பம்சங்கள் குறித்து விளக்கினார். மேலும், நானோ DAP விவசாயிகள் திட்டம், பயிர்களுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள், மண்ணின் கார அமிலத்தன்மை (pH) மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும், மண் வளத்தை மேம்படுத்தி பயிர் மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

கோபிசெட்டிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜீவதயாளன், தமிழக அரசின் பல்வேறு விவசாய

நலத்திட்டங்கள் குறித்து விளக்கினார். உழவன் செயலி மூலம் விவசாயிகள் பதிவு செய்து அரசு மானியங்கள் மற்றும் வேளாண் நலத்திட்டப் பயன்களைப் பெறுவது குறித்தும் எடுத்துரைத்தார். கூகலூர் கிராமத்தில் கோரமண்டல் நிறுவனம் செயல்படுத்தி வரும் குரோமோர் கிராம் மாதிரி கிராமத் திட்டம், விவசாயிகளுக்கான ஆலோசனைச் சேவைகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டப் பணிகளைப் பாராட்டினார்.

தடப்பள்ளி கால்வாய் பாசன விவசாயிகள் சங்கத்தின் T9 தலைவர் மரப்பன் மற்றும் செயலாளர் குகன் ஆகியோர் கூகலூர் கிராம விவசாயிகளுடன் இணைந்து, கோரமண்டல் நிறுவனத்தின் குரோமோர் கிராம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டு வரும் விவசாய மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களைப் பாராட்டி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

குரோமோர் கிராம் மாதிரி கிராமத் திட்டத்தின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், கூகலூர் கிராமத்தைச் சேர்ந்த 10 முன்னோடி விவசாயிகளுக்கு விவசாயப் பணிகளை மேம்படுத்தும் நோக்கில் 10 விசைத் தெளிப்பான்கள் (Knapsack Sprayers) வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கோபிசெட்டிபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜீவதயாளன், விவசாயிகள் சங்கப் பிரதி நிதிகள் மற்றும் கூகலூர் கிராமத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பரப்புதல், மண் வளப் பாதுகாப்பு, சமச்சீர் உர மேலாண்மை மற்றும் அரசு நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் நிலையான வேளாண் வளர்ச்சிக்கும் கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனம் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கி வருகிறது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

குடவாசலில் தேனீ வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேளாண் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு



திருவாரூர், நவ.6

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience – RAWE) ஒரு பகுதியாக, தேனீ வளர்ப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி குடவாசல் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் 45 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட தேனீ வளர்ப்பு விவசாயி எஸ்.பிரபாகரன் சிறப்பு விளக்க மளித்தார்.

இந்நிகழ்ச்சியில் தேனீ வளர்ப்பின் அடிப்படைகள், தேனீக்களின் வகைகள், தேனீக் கூட்டைப் பராமரிக்கும் முறைகள், தேன் சேகரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பிற்குத் தேவையான மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் ஈட்டும் வாய்ப்பை உருவாக்குகிறது. குறைந்த நிலப்பரப்பிலும் கூடுதல் தொழிலாக தேனீ வளர்ப்பை மேற்கொள்ள முடியும்.

தொடர்ந்து, தேனீக் கூட்டுகளை அமைக்கும் இடத்தைத் தேர்வு செய்தல், தேனீக்களுக்கு ஏற்ற சுற்றுச்சூழலை உருவாக்குதல், கூட்டைப் பாதுகாத்தல், நோய் மற்றும் எதிரிகளிடமிருந்து தேனீக்களைப் பாதுகாத்தல் மற்றும் தேன் சேகரிக்கும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

45 ஆண்டுகளுக்கும் மேலான தனது அனுபவத்தின் அடிப் படையில் தேனீ வளர்ப்பை ஒரு சிறந்த வேளாண் சார்ந்த தொழிலாக மேற்கொள்ளும் வழிமுறைகள் மற்றும் அதன் பொருளாதாரப் பயன்கள் குறித்த பல்வேறு தகவல்களையும் எஸ்.பிரபாகரன் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் மூலம் வேளாண் மாணவர்கள் தேனீ வளர்ப்பு மற்றும் அதன் மேலாண்மை முறைகள் குறித்து நடைமுறை அறிவைப் பெற்றதுடன், விவசாயிகள் தேனீ வளர்ப்பைத் தங்களது விவசாயத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகளையும் அறிந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, விவசாயத்தில் மகரந்தச் சேர்க்கையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு, தேனீ வளர்ப்பை ஊக்குவித்து நிலையான வேளாண்மை மற்றும் விவசாயிகளின் வருமான மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் வகையில் அமைந்தது.



வறட்சியில் வளரும் முள்ளில்லா சப்பாத்தி கள்ளி சாகுபடி



முள் இல்லாத சப்பாத்தி கள்ளி (SPINELESS CACTUS) NOPAL இதனுடைய அறிவியல் பெயர் OPUNTIA FICUS INDIA). இது வறண்ட பிரதேசங்களிலும் வறட்சியான கால நிலைகளிலும் நன்றாக வளரக்கூடிய ஒரு சத்துமிக்க தாவரமாகும்.

இத்தாவரத்தின் தாயகம் மெக்சிகோவில் உள்ள ஆஸ்டெக் (AZTEC) இங்குள்ள மக்கள் இதனை பல ஆண்டுகளாக உண வாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாகுபடி முறை

வறண்ட வளமற்ற நிலங்களில் கூட வளரும். குறைந்த அளவு நீரை போதுமானது. கணுக்கள் முள் இல்லாத சப்பாத்திக் கள்ளியின் முதிர்ந்த இலைத்துண்டுகளை (கணுக்கள்) நடவுக்காக தேர்வு செய்ய வேண்டும். அப்படியே நடவு செய்யாமல் இலைத்துண்டுகளை 2-3 நாட்கள் நிழலில் உலர்த்தி காயவைத்த நடவு செய்தல் அழுகலை தடுக்கும்.

நடவு முறை

கணுக்களை நேரடியாக மண்ணில் பாதி பாதியாக புதைத்து நடவேண்டும். 60 நாட்களுக்கு ஒரு முறை முதிர்ந்த இலைத் துண்டுகளை அறுவடை செய்யலாம்.

முள்ளில்லாத கள்ளியில் உள்ள சத்துகள்

இதில் சுமாராக 85%- 90% வரை நீர்சத்து உள்ளது. இதில் புரத சத்தும் மிக மிக குறைவு (4%-8%). இதனால் வறண்ட பகுதியில் கால்நடைகளுக்கு தேவையான நீர்த்தேவையை பூர்த்தி செய்கிறது. வறட்சி காலங்களில் ஆடு, மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம்.

கால்நடை தீவனமாக பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை

1) இதனை முழுமையாக தீவனமாக கொடுத்தால் கால்நடை களுக்கு வயிற்றுபோக்கு ஏற்படும். இதனை தடுக்க சிறு சிறு துண்டுகளாக வெட்டி, இதர தீவனங்களுடன் கலந்து கொடுக்க வேண்டும்.

2) முள்ளில்லாதது என்று கூறப்பட்டாலும் இதன் மடல்களில் (CLOCHIDS) குளோச்சீட்ஸ் எனப்படும் மிகச்சிறிய முள்/சுணை இருக்கும். இவற்றை சரியாக செதுக்கி நீக்காவிட்டால் கால்நடைகளின் நாக்குகளில் முள்கொத்தி புண்ணாகும். எனவே அவற்றை அகற்றி கொடுக்க வேண்டும்.

இது குறித்த விபரங்களை மேலும் அறிய மத்திய பிரதேசத்தில் உள்ள (ICAR DA) வறண்ட பகுதிகளுக்கான சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம். இந்த கள்ளிச்செடி கால்நடை தீவனமாக மட்டுமன்றி பயோ கேஸ் தயாரிக்கவும், பயோ லெதர் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தபடுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் நம் உயிர்! நீர் நம் எதிர்காலம்!
பள்ளி மாணவர்களின் இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி!

வேலூர், நவ.6

ஆதிபராசக்தி தனியார் கல்லூரி தோட்டக்கலை மாணவர்கள் கே.வி.குப்பம் கிராமப் பள்ளியில் மரங்களின் முக்கியத்துவம் மற்றும் நீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இதில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, மரங் களைப் பாதுகாப்போம், மழைநீரைச் சேமிப்போம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர்வளப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தினர்.

இப்கோ நானோ காப்பர் – தாவர ஆரோக்கியத்திற்கான நவீன தீர்வு!



சென்னை, நவ.6

நானோ காப்பர் என்பது நவீன நானோ தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தாவர ஊட்டச்சத்து ஆகும். இது தாவர வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புத் திறனுக்கும், விளைச்சல் மேம்பாட்டிற்கும் மிகுந்த ஆதாரமாக இருக்கிறது. நானோ காப்பர் தாவர அமைப்பு மற்றும் குளோரோபில் உற்பத்தியில் உதவுகிறது. இதனால் தாவரங்கள் ஆரோக்கியமாக வளர்ந்து, ஒளிச்சேர்க்கை சிறப்பாக நடைபெறுகிறது. மேலும், இலைகள் பழுப்படையாமல் பயிரின் வளர்ச்சியை அதிகரித்து விதை உருவாகுவதையும் உறுதி செய்கிறது.

மேலும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் தாவரங்கள் பல்வேறு பூஞ்சை மற்றும் வைரஸ் நோய்களிலிருந்து தப்பித்து ஆரோக்கியமாக வளர் கின்றன. அதேபோல், ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகரிக்கும் திறன் வாய்ந்தது. இதன் மூலம் தாவர வேர்மற்றும் இலைகள் ஊட்டச்சத்தை சிறப்பாக உறிஞ்சுவதால், முழு தாவர வளர்ச்சி மேம்படுகிறது. நானோ காப்பர் பயன்படுத்தும் முறையும் எளிமையானது.

பயன்படுத்தும் அளவு

ஒரு லிட்டர் நீருக்கு 1 மிலி வீதம், ஏக்கருக்கு 1000 மிலி. இதனை இலை வழியாகவோ, சொட்டுநீர்ப் பாசனம் மூலமோ பயன் படுத்தலாம். மேலும், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், ட்ரோன் தெளிப்பு முறையிலும் நானோ காப்பர் பயன்படுத்தலாம். 10 லிட்டர் டேங்கிற்கு 100 மிலி நானோ காப்பர் இலைவழி தெளிக்கலாம். இதன் மூலம் விரைவாகவும், சமமாகவும் தெளித்து, சிறந்த பயிர் ஆரோக்கியத்தைப் பெறலாம்.

நானோ காப்பர் தாவர ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சக்தி! இது பயிர்களின் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் தரத்தை மேம்படுத்தி, விவசாயியின் நம்பகமான இப்கோ திகழ்கிறது.

இப்கோ நானோ காப்பர் நவீன விவசாயத்தின் நம்பிக்கையான தோழன்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மதுரை மல்லியின் மணம் உலகச் சந்தையை அடைகிறதா?

ஒரு பூவின் பின்னால் ஒரு விவசாயியின் வாழ்க்கை



அதிகாலைப் பொழுதிலேயே மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மல்லிகைத் தோட்டங்கள் பரபரப்பாகி விடுகின்றன. பனித் துளிகள் படர்ந்த மொட்டுகளை விவசாயிகள் கவனமாகப் பறித்து சந்தைக்கு அனுப்புகின்றனர். பெண்களின் கூந்தல், கோயில்கள், திருமணங்கள், திருவிழாக்கள் என மதுரை மல்லி தமிழர் வாழ்வியலில் தனித்த இடம் பெற்றுள்ளது. அதன் மணம் உலகம் முழுவதும் பரவினால், அந்த மலரை உற்பத்தி செய்யும் விவசாயிக்கும் அதற்கேற்ற வருமானம் கிடைக்கிறதா என்பதே முக்கியமான கேள்வி.

1. மணம் மட்டுமல்ல; மண்ணின் அடையாளம்

மதுரை மல்லி ஒரு மலர் மட்டுமல்ல; பண்பாடு, பாரம்பரியம், வாழ்வாதாரம் ஆகியவற்றின் அடையாளம். இதற்கு 2013ஆம் ஆண்டு புவிசார் குறியீடு (GI) அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது மதுரை மல்லியின் தனித்துவத்தையும் அதன் புவியியல் அடையாளத்தையும் பாதுகாக்க உதவுகிறது. மதுரை மட்டுமின்றி இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை போன்ற மாவட்டங்களிலும் மல்லிகை சாகுபடி நடைபெறுகிறது. இந்தப் பாரம்பரியப் பெருமை விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வாய்ப்பாகவும் மாறவேண்டும்.

2. உலகச் சந்தைக்கான வாய்ப்பு – இன்னும் செய்ய வேண்டியவை

மதுரை மல்லியின் வெளிநாட்டுச் சந்தைப் பயணம் தொடங்கி உள்ளது. 2021ஆம் ஆண்டு றூணூ அங்கீகாரம் பெற்ற மதுரை மல்லி உள்ளிட்ட பாரம்பரிய மலர்கள் அமெரிக்கா மற்றும் துபாய்க்கு அனுப்பப்பட்டதாக இந்திய அரசின் வர்த்தக அமைச்சகம் தெரிவித்தது. 2022ஆம் ஆண்டிலும் ஓமான் நாட்டின் மஸ்கட் நகருக்கு மலர்களை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் பண்பாட்டு மற்றும் சமயத் தேவைகள் இதற்குச் சந்தை வாய்ப்பை

உருவாக்குகின்றன. ஆனால், சில ஏற்றுமதி முயற்சிகள் நடந்து உள்ளன என்பதற்காக உலகச் சந்தையில் மதுரை மல்லி நிலை பெற்றுவிட்டது என்று கூற முடியாது. தொடர்ச்சியான விநியோகம், ஒரே தரம், பொருத்தமான பேக்கேஜிங், விரைவான போக்குவரத்து, நம்பகமான வாங்குபவர்கள் ஆகியவை அவசியம்.

3. விலை ஏற்ற இறக்கம் : விவசாயியின் சவால்

திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் விசேஷ நாட்களில் மல்லிகைக்கான தேவை அதிகரித்து விலை உயரலாம். தேவை குறையும் நாட்களில் விலை சரிவதால் விவசாயியின் வருமானம் பாதிக்கப்படுகிறது. அன்றைய வரத்து, பூக்களின் தரம், அறுவடை நேரம், போக்குவரத்துச் செலவு, இடைத் தரகர்கள் மற்றும் விற்பனை வசதிகள் ஆகியவை விலையைத் தீர்மானிக்கின்றன. எனவே உற்பத்தியை அதிகரிப்பது மட்டும் தீர்வல்ல. சந்தைத் தேவையை முன்கூட்டியே அறிதல், விற்பனையைத் திட்டமிடுதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் ஆகியவையும் முக்கியம். உலகச்சந்தையில் தேவை உள்ள மலருக்கு உள்ளூர் சந்தையில் விலை குறையும் நாட்களிலும் விவசாயிக்குப் பயன் கிடைக்க வழிகள் உருவாக்கப்பட வேண்டும்.

4. அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் முக்கியம்

மல்லிகை மொட்டுகள் விரைவில் தரம் இழக்கக்கூடியவை. ஆகவே, பொதுவாக முழுமையாக வளர்ந்தும் இன்னும் விரியாத மொட்டுகளை அதிகாலையில் பறித்து, அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் தரப்படுத்த வேண்டும். நசுங்காமல் பாதுகாக்கும் பேக்கேஜிங், வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் கையாளுதல்மற்றும் விரைவான போக்குவரத்து ஆகியவை பூக்களின் புத்துணர்ச்சியைப் பாதுகாக்க உதவும். சேமிப்பு மற்றும் குளிர்சங்கிலி முறைகள் மல்லிகைக்குப் பொருத்தமான தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பூக்களைப் பறிப்பதற்கு முன்பே வியாபாரிகள், மொத்த விற்பனையாளர்கள் அல்லது ஏற்றுமதியாளர்களுடன் தேவையைப் பற்றி பேசுவது விற்பனைத் திட்டமிடலுக்கு உதவும். பேக்கேஜிங் தொழில்நுட்பம் உள்ளிட்ட ஆதரவு முயற்சிகள் ஏற்றுமதித் தரத்தை மேம்படுத்த உதவக்கூடும்.

5. மதிப்புக்கூட்டல் : புதிய வருமானப் பாதைகள்

புதிய பூவாக விற்பனை செய்வதுடன் மல்லிகையின் மதிப்பை பஉயர்த்தும்பிறவழிகளையும் ஆராயலாம். மாலைகள் மற்றும் மலர் அலங்காரத் தயாரிப்புகள், நறுமணத் தொழிலுக்கான மூலப் பொருட்கள், பொருத்தமான தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்படும்



நறுமணச் சாறுகள் போன்றவை சாத்தியமான வாய்ப்புகள். விவசாயிகள் குழுவாக இணைந்து தரப்படுத்துதல், பேக்கேஜிங், சந்தைப்படுத்துதல் ஆகிய வற்றையும் மேற்கொள்ளலாம். இருப்பினும், மதிப்புக்கூட்டல் தானாகவே அதிக லாபத்தை உறுதி செய்யாது. முதலீடு, தொழில் நுட்பத்திறன், மூலப்பொருள் கிடைக்கும் அளவு, தரத்தர நிலைகள் மற்றும் வாங்குபவர்களின் தேவை ஆகிய வற்றை மதிப்பிட்ட பின்னரே தொழில் தொடங்க வேண்டும்.

6. GI அங்கீகாரம் விவசாயிக்கு எப்படிப் பயனளிக்கும்?

GI குறியீடு மதுரை மல்லியின் பெயரையும் தனித்துவத்தையும் பாதுகாக்கிறது. அந்த அங்கீகாரம் விவசாயியின் வருமானமாக மாற, உண்மையானமதுரை மல்லி என்ற அடையாளத்தைச் சரியாகப் பயன்படுத்துதல், தரத்தைப் பராமரித்தல், நம்பகமான விநியோகச் சங்கிலியை உருவாக்குதல்மற்றும் போலியான பெயர்ப் பயன்பாட்டைத் தடுப்பது அவசியம். விவசாயிகள் அமைப்புகள், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள்மற்றும் அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் றூணூ அங்கீகாரத்தின் பயன் அதிகரிக்கலாம்.

7.விவசாயிகள் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

சந்தை விலை மற்றும் தேவையைத் தொடர்ந்து அறிந்து கொள்ளுதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் முறைகளைப் பின்பற்றுதல், தரமான பேக்கேஜிங் மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துதல், உழவர் குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) மூலம் கூட்டாக விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை ஆராய்தல், ஏற்றுமதியில் ஆர்வமுள்ளவர்கள் ஏற்றுமதியாளர்கள் மற்றும் வேளாண் நிபுணர்களின் வழிகாட்டுதலைப் பெறுதல், உற்பத்திச் செலவு, விற்பனை விலை மற்றும் விற்பனையாகாமல் மீதமுள்ள பூக்களின் அளவைப்பதிவு செய்தல், இத்தகைய பதிவுகள் எந்த நடைமுறை உண்மையில் செலவைக் குறைத்து வருமானத்தை உயர்த்துகிறது என்பதை விவசாயிகள் அறிய உதவும்.

மணத்துடன் வருமானமும் மலரட்டும்

மதுரை மல்லி தமிழ்நாட்டின் பண்பாட்டுப் பெருமையாகவும், மலர் வணிகத்தில் தனித்துவமான அடையாளமாகவும் திகழ்கிறது. வெளிநாட்டு ஏற்றுமதி முயற்சிகள் அதன் உலகளாவிய வாய்ப்பு

களை வெளிப்படுத்துகின்றன. ஆனால், உலகச்சந்தையில் நிலையான இடத்தைப் பெற மணம் மட்டும் போதாது, தரம், தொழில் நுட்பம், சந்தைத் திட்டமிடல், விரைவான போக்குவரத்து மற்றும் விவசாயிக்கு நியாயமான வருமானம் ஆகியவை ஒன்றிணைய வேண்டும்.

மல்லிகையைப் பறிக்கும் விவசாயியின் உழைப்பும், தரத்தைப் பாதுகாக்கும் தொழில்நுட்பமும், சந்தையை அடையும் விநியோகச் சங்கிலியும் இணைந்தால் தான் அதன் முழுமதிப்பை உருவாக்க முடியும். மதுரை மல்லியின் மணம் உலகைச் சென்றடைவது பெருமை, அந்த மணத்தை உருவாக்கும் விவசாயியின் வாழ்க்கையும் வளம் பெறுவது தான் உண்மையான வெற்றி!

தகவல் : ***கயல்விழி.ம, இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை மாணவி, வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், NMV பல்கலைக்கழகம், அருப்புக்கோட்டை - 626 101, விருதுநகர் மாவட்டம்.***

கிராமப்புற வேளாண்மை அனுபவ பயிற்சி துவக்க விழா



ஈரோடு, நவ.6

ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில், ஜே.கே.கே முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரியின் நான்காம் ஆண்டு படிக்கும் வேளாண் மாணவர் களுக்கான கிராமப்புற வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண் மாணவர்கள் மற்றும் உள்ளூர் விவசாயிகள் கலந்து கொண்டனர். பெருந்துறை குழுவை சேர்ந்த அருள்ஞானி, பவனிஹா, சாருமதி, தர்ஷினி, நந்தினி போன்ற பதினோரு மாணவர்கள் ஒருங்கிணைந்து விழாவை நடத்தினர். சிறப்பு விருந்தினர் ஆன உயிர் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த கார்த்திகேயன், பேராசிரியர் மற்றும் தேவி, உதவி வேளாண்மை அலுவலர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விழாவில், சிறப்பு விருந்தினருக்கும் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் நினைவுப் பரிசாக தென்னை மற்றும் வாழைக் கன்றுகள் வழங்கப்பட்டன. விழா இனிதே நிறைவுற்றது.

கரும்பில் டிரைக்கோடெர்மா விரிடே பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி

திருச்சி, நவ.6

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகளான ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறை எழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர்



ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ், கரியமாணிக்கம் கிராம விவசாயிகளுக்கு கரும்பில் வேர் அழுகல் மற்றும் வேர் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடே (Trichoderma viride) பயன்படுத்தும் முறை குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி வேளாண் மாணவிகளால் அளிக்கப்பட்டது. டிரைக்கோடெர்மா விரிடே என்பது மண்ணில் வாழும் நன்மை தரும் உயிரியல் பூஞ்சையாகும். இது கரும்புப் பயிரில் வேர் நோய்களை ஏற்படுத்தும் சில தீங்கு விளை விக்கும் பூஞ்சைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவுகிறது. மேலும், வேர் வளர்ச்சியை ஊக்குவித்து, மண்ணின் நுண்ணுயிர் வளத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இப்பயிற்சியின் போது, டிரைக்கோடெர்மா விரிடே உயிரியல் பூஞ்சைக் கொல்லியை பரிந்துரைக்கப்பட்ட அளவில் கரும்பு நடவு செய்வதற்கு முன்பு விதைக் கரணைகளுக்கு விதை நேர்த்தி செய்வதன் முறை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும்போது பயன்படுத்துவதன் முக்கியத்து வத்தையும் விளக்கினர். மேலும், ரசாயன பூஞ்சைக் கொல்லி களுடன் கலந்து பயன்படுத்துவதைத் தவிர்த்து, வேளாண் துறை பரிந்துரைத்த அளவு மற்றும் முறைகளைப் பின்பற்ற வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.

காளான் வளர்ப்பு குறித்து பெண்களுக்கு செயல்விளக்கப் பயிற்சி!

சிவகங்கை, நவ.6



சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டாரத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்களுக்கு, வேளாண்மை சார்ந்த சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் காளான் வளர்ப்பு (Mushroom Cultivation) குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், அதன் மூலம் கிடைக்கும் வருமான வாய்ப்புகள் மற்றும் குறைந்த இடவசதியில் காளான் வளர்ப்பை மேற்கொள்ளும் முறைகள் குறித்து பெண் களுக்கு விளக்கப்பட்டது.

மேலும், காளான் வளர்ப்பிற்குத் தேவையான காளான் குடில்

(Mushroom Shed) அமைக்கும் முறை, காளான் விதை (Spawn) தயாரிப்பு, காளான் வளர்ப்புப் பைகள் (Mushroom Bags) தயாரிக்கும் முறை மற்றும் அவற்றை முறையாகப் பராமரிக்கும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

காளான் வளர்ப்பை வீட்டிலிருந்தே சிறு அளவில் தொடங்கி, கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான சுயதொழில் வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்றும் பெண்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியானது வேளாண்மை விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பு.அரவிந்த் வழிகாட்டுதலின்படி, மாணவி களான பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவஸ்ரீ மற்றும் செ.ராஜேஸ்வரி ஆகியோரால் சிறப்பாக நடத்தப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் பெண்கள் காளான் வளர்ப்புத் தொழில்நுட்பம் குறித்த அடிப்படை அறிவைப் பெற்று, சுயதொழில் தொடங்குவதற்கான விழிப்புணர்வைப் பெற்றனர்.

விளைநிலம் காப்போம் நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்பு



திருவண்ணாமலை, நவ.6

திருவண்ணாமலை மாவட்டம், புலிக்கரை துணை வட்டார விரிவாக்க மையத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) மற்றும் விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2026-27 (SSEPERS) தீட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பாப்பாரப்பட்டி, வேளாண்மை அறிவியல் நிலையத்திலிருந்து, முனைவர் சங்கீதா (மண்ணியல் துறை) 'விளை நிலங்களை காப்போம்' (Khet Bachao Abhiyan) தலைப்பில் விவசாயிகளுக்கு மண்ணின் முக்கியத்து வத்தையும் பாதுகாப்பு பற்றியும் விளக்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர், திருவண்ணாமலை மாணவிகள் உயிர் உரங்கள் விதை நேர்த்தி, நீலநிற ஒட்டும் வலை, ஒளிப்பொறி, இலைநிற அட்டவணை மற்றும் நுண்ணூட்டக் கலவை போன்றவற்றின் செயல் முறை விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.6

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 06.11.26 அன்று, ஸ்ரீ முஷ்ணம், காட்டு மன்னார்கோயில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தில் உள்ள கண்ணூர், சித்த மல்லி மற்றும் பிள்ளை யார் தாங்கல் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் கண்ணன், சிவசங்கர் மற்றும் கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போதுமண்வள அட்டையில் பரிந் துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோயில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி வேளாண் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வுப் பேரணி!

சேலம், நவ.6

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஐவேலி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கும் பள்ளி மாணவர் களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடைபெற்றது.



தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் இப்பேரணியை ஏற்பாடு செய்தனர். இதில் பள்ளி மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, மழைநீரை சேமிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு வாசகங்களை முழக்கமிட்டபடி பேரணியாகச் சென்றனர்.

மழை நீரை வீணாக்காமல் சேமித்தல், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துதல், நீர் பற்றாக்குறையைத் தவிர்த்தல் மற்றும் எதிர்காலத் தலைமுறைக்காக நீர்வளத்தைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சோழபாண்டியில் பாதுகாப்பான மற்றும் பசுமை தீபாவளி விழிப்புணர்வு பேரணி!

திருவாரூர், நவ.6

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவிகள் மேற்கொள்ளும் கிராமப்புற வேளாண்மைப் பயிற்சித் திட்டத்தின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், சோழபாண்டி கிராமத்தில் அமைந்துள்ள மீனாட்சி மாரியப்பா அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுடன் இணைந்து 'பாதுகாப்பான மற்றும் பசுமை தீபாவளி' (Safe and Eco-Friendly Diwali) குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று சிறப்பாக நடத்தப்பட்டது.



வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் ஒருங்கிணைத்த இந்த பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பேரணியின் மூலம் பட்டாசுகளைப் பாதுகாப்பாக வெடிக்கும் முறைகள், பட்டாசுகளால் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுபாட்டின் தீமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத வகையில் பசுமை தீபாவளியைக் கொண்டாடுவதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப் பட்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மாணவர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கிராமத்தின் முக்கிய வீதிகளின் வழியே விழிப்புணர்வு ஊர்வலமாகச் சென்றனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் வேளாண்மைக்கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

